செ. கு. எண்: 155 நாள் :23.08.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 23.8.2014

தூத்துக்குடி மாவட்டம், தெர்மல்நகர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. குமார் அவர்கள் 12.5.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாநகர நுண்ணறிவுப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.ஸ்ரீதர் ரெங்கராஜ் அவர்கள் 12.5.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாநகரம், எடமலைப்பட்டி புதூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.சீனிவாசன் அவர்கள் 17.5.2014 அன்று மன்னார்புரம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. நடேசன் அவர்கள் 20.5.2014 அன்று ஏற்பட்ட மாரடைப்பால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், மண்டைகாடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.கிருஷ்ணபிரசாத் அவர்கள் 24.5.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், பல்லாவரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.ஜோதி மாணிக்கம் அவர்கள் 24.5.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், ஐ.சி.எப். காவல் நிலைய போக்குவரத்துப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. M.வெங்கடேசன் அவர்கள் 27.5.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், பாலுசெட்டி சத்திரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. முடியப்பன் அவர்கள் 28.5.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் நகரம் மேற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.முருகேசன் அவர்கள் 29.5.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், போடி தாலுகா காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. P.செல்வக்குமார் அவர்கள் 31.5.2014 அன்று பெரம்பலூர் மாவட்டம், தண்ணீர் பந்தல் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் குமார், ஸ்ரீதர் ரெங்கராஜ், சீனிவாசன், கிருஷ்ணபிரசாத், ஜோதி மாணிக்கம், முடியப்பன், முருகேசன்; தலைமைக் காவலர்கள் நடேசன், வெங்கடேசன், செல்வக்குமார்; ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**